**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

முறையீட்டு மனு எண்.110/மா/2024,
நாள் 18.11.2024

S.G. ராஜலெட்சுமி, மதுரை. ............ முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் 4,
மதுரை மாநகராட்சி. ............. எதிர் மனுதாரர்

மதுரை தெற்கு மாசி வீதி, காமாட்சி அம்மன் கோவில் 1வது தெரு, கதவு எண்.1 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. S. G. ராஜலெட்சுமி என்பவரின் நாளிடாத மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.07.2024 அன்று பெறப்பட்டு, 110/மா/2024, என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

மதுரை தெற்கு மாசி வீதி, காமாட்சி அம்மன் கோவில் 1 வது தெரு, கதவு எண்.1 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி S.G.ராஜலெட்சுமி என்பவர் தன்னுடைய நாளிடாத மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 4, வார்டு எண். 45, சின்ன கண்மாய் தெரு, கதவு எண். 1F/2, வீட்டின் பழைய வரிவிதிப்பு எண்.115/071/02876, புதிய வரிவிதிப்பு எண். 115/045/901825க்குட்பட்ட கட்டிடம் வணிக உபயோகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி சொத்து எனது மாமியார் S.R.கமலம் அவர்கள் எழுதி வைத்த உயில் சாசனம் எண்:372/2001, நாள் 01.11.2001–ன் பிரகாரம் உயில் சாசனத்தில் கண்ட 7வது இலக்க சொத்து என் மாமியார் காலமான பின் எனக்கு பாத்தியப்படுத்தப்பட்டுள்ளது. என்னுடைய மாமியார் கமலம் அவர்கள் 09.10.2021–ல் காலமானார்கள். மேலும், எனது மாமானரின் அக்கா மகள் சர்வாகிருஷ்ணவேணி அம்மாள் அவர்கள் எழுதி வைத்த உயில் சாசனம் எண்:371/2001 நாள் 01.11.2001–ன் பிரகாரம்

உயில் சாசனத்தில் கண்ட 3வது இலக்க சொத்து மேற்படி கிருஷ்ணவேணி அம்மா காலமான பின் எனக்கு பாத்தியப்படுத்தப்பட்டுள்ளது. கிருஷ்ணவேணி அம்மாள் 13.09.2020ல் காலமாகிவிட்டார்கள். திருமதி கமலம் அம்மாள் மற்றும் கிருஷ்ணவேணி அம்மாள் ஆகிய இருவரும் எழுதி வைத்த உயில் சாசனத்தின்படி அவர்கள் காலமான பின் மேற்படி சொத்து எனக்கு பாத்தியப்பட்டு, வரிப்பிரிவினையின்பேரில் 01.10.2021 முதல் அரைவருட வரியாக ரூ 5,961/- என விதிக்கப்பட்டு வரி நிலுவையில்லாமல் செலுத்தப்பட்டுள்ளது. 01.04.2022 பொது சீராய்வில் ரூ.5,961/-லிருந்து 100% உயர்வு செய்து ரூ 11,922/- என வரி விதித்ததை ஆட்சேபனை செய்து 20.01.2023ல் மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஆட்சேபனை மனு பதிவு தபாலில் சமர்ப்பிக்கப்பட்டது. என் ஆட்சேபனை மனுவின் மீது மதுரை மாநகராட்சி மண்டலம் எண்.4, உதவி ஆணையாளர் அவர்களால் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு மனு சமர்ப்பிக்கிறேன். மேலும் 01.04.2022 பொது சீராய்வில் விதிக்கப்பட்ட வரிவிதிப்பை கீழ்க்கண்ட காரணங்களால் ஆட்சேபித்து, மேல்முறையீட்டு மனுவை தங்கள் முன் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

1. மதுரை மாநகராட்சி சொத்து வரி திருத்த அறிவிக்கை 13.04.2022 நாளிதழில் வெளியிடப்பட்டது. மேற்கண்ட சொத்துவரி திருத்த அறிவிக்கையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை (நிலை) எண். 53 நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/R1 நாள் 01.04.2022 பிரகாரம் பொது சீராய்வு நடத்த மதுரை மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.10 நாள்12.04.2022 பிரகாரம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பொது சீராய்வு நடத்தப்பட்டது.

2. நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக சுற்றறிக்கை ந.க.எண் 40032/2012/R1 நாள் 01.04.2022 சுற்றறிக்கையின் 10–வது பாராவில் சொத்துவரி/காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ளும்போது கட்டிடத்தின் பராமரிப்பு, வயது மற்றும் கட்டிடத்தின் தன்மை ஆகியவற்றிக்கான தள்ளுபடி, அரசாணை (நிலை) எண்.150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 12.11.2007 மற்றும் அரசு கடிதம் எண் 38279/தேர்தல்/2006–2 நாள் 01.02.2008 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல்படி வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. சுற்றறிக்கையில் அரசாணை (நிலை) எண்.150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 12.11.2007–ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

" The Commissioners of all Municipalities and Municipal Corporations and Executive Officers of all Town Panchyats are instructed that the taxation rules and relevant guidelines should be strictly followed while taking up the general revision of property tax in all the Urban Local Bodies with effect from 01.04.2008".

மேலும்,அரசு கடித எண் 38279/Election/2006-2 dated 1.2.2008 ல் கண்ட வழிகாட்டுதல் நெறிமுறையின் பிரகாரம் கீழ்க்கண்டவாறு வரி நிர்ணயிக்கப்பட வேண்டும்.

| 01.04.2008 பொது சீராய்வில் வழங்கப்பட்ட கட்டிட கழிவு | 01.04.2022 பொது சீராய்வில் வழங்கப்பட வேண்டிய கட்டிட கழிவு |
|---|---|
| 5வருடம் வரை ... கழிவு இல்லை<br>5 முதல் 15 வருடம் வரை ... 10% கழிவு<br>15 முதல் 25 வருடம்வரை ... 15% கழிவு<br>25 வருடத்திற்கு மேல் ... 20% கழிவு | 5வருடம் வரை .... கழிவு இல்லை<br>5 முதல் 15 வருடம் வரை ... 10% கழிவு<br>15 முதல் 25 வருடம்வரை ... 15% கழிவு<br>25 வருடத்திற்கு மேல் ... 20% கழிவு |

| 01.04.2008 பொது சீராய்வில் வழங்கப்பட்ட உச்ச வரம்பு | 01.04.2022 பொது சீராய்வில் வழங்கப்பட்ட உச்ச வரம்பு |
|---|---|
| 01.04.2007க்கு பின் வரி விதிக்கப்பட்ட கட்டிடங்கள்- வரி உயர்வு இல்லை | 01.04.2021க்கு பின் வரி விதிக்கப்பட்ட கட்டிடங்கள் - வரி உயர்வு இல்லை |
| 01.04.2006 முதல் 30.09.2007 முடிய .... 5%<br>01.04.2005 முதல் 31.03.2006 முடிய ... 10%<br>01.04.2004 முதல் 31.03.2005 முடிய .... 15%<br>01.04.2003 முதல் 31.03.2004 முடிய .... 20% | 01.04.2020 முதல் 30.09.2021 முடிய .... 5%<br>01.04.2019 முதல் 31.03.2020 முடிய .... 10%<br>01.04.2018 முதல் 3103.2019 முடிய .... 15%<br>01.04.2017 முதல் 31.03.2018 முடிய .... 20% |

மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் நாளிதழில் வெளியிட்ட சொத்துவரி திருத்த அறிவிக்கை பிரகாரம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட சுற்றறிக்கையில் கண்டுள்ள பிரகாரம் கட்டிட கழிவோ அல்லது கட்டிட உச்சவரம்போ விதித்து உத்தரவு பிறப்பிக்கவில்லை.

எனவே 01.04.2022 பொது சீராய்வில் நிர்ணயிக்கப்பட்ட வரி ரூ11,922/-ன் பிரகாரம், 2022-2023–1 மற்றும் 2 ஆகிய 2 அரையாண்டுகளுக்கும் சொத்துவரி செலுத்தியதின் அடிப்படையில், என்னுடைய மனுவினை கனிவுடன் பரிசீலனை செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை பாரா 10–ல் கண்டுள்ள பிரகாரம் 01.10.2021–ல் ரூ5,961/- என வரிவிதித்திருக்கும் நிலையில் 01.04.2022 பொது சீராய்வில் 100% வரி உயர்வை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 28.08.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. மதுரை மாநகராட்சி, மண்டலம் 4–ன் உதவி ஆணையர் தனது 13.09.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“மனுதாரர் மனுவில் தெரிவித்த மதுரை மாநகராட்சி, மண்டலம் 4 (தெற்கு) வார்டு 45, கதவு எண் 1F/2 சின்ன கண்மாய் தெரு, சேர்மன் முத்துராமையர் தெரு, வரிவிதிப்பு எண்.

115/045/901825 (115/071/02876)க்கு 01.10.2021 முதல் சொத்து வரிவதிப்பு செய்யப்பட்டது. 01.04.2022 முதல் தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி G.O(MS)No.53-ன்படியும், மதுரை மாநகராட்சி மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் அடிப்படையில் வணிக வரிவிதிப்பிற்கு ஏற்கனவே உள்ள வரித்தொகையில் 100% வரி உயர்வு செய்யப்பட்டுள்ளது என்றும் மேலும் இத்தகவல் மனுதாரருக்கு 23.03.2023 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.11.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 08.10.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன,

5. மனுதாரர் திருமதி S.G. ராஜலெட்சுமி தன்னால் நேரில் ஆஜராக இயலவில்லை என்றும், தன் சார்பாக தன்னுடைய கணவர் திரு.S.R.கணேஷ்பாபு அவர்களை விசாரணையில் கலந்து கொள்ள அனுமதி அளிக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்அவர்களுக்கு 05.11.2024 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டார்.

6.மனுதாரரின் கணவர் திரு.S.R.கணேஷ்பாபு அவர்கள் 06.11.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“மதுரை மாநகராட்சி மண்டலம் 4, வார்டு எண் 45, சின்ன கண்மாய் தெரு எண்.1F/2 வீட்டின் பழைய வரிவிதிப்பு எண்.115/071/02876 புதிய வரிவிதிப்பு எண்.15/045/901825-க்குட்பட்ட கட்டிடம் வணிக உபயோகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த பாத்தியப்பட்ட சொத்திற்கு வரிப்பிரிவினையின் பேரில் 01.10.2021 முதல் அரைவருட வரியாக ரூ5,961/- என விதிக்கப்பட்டு வரி நிலுவையில்லாமல் செலுத்தப்பட்டுள்ளது. 01.04.2022 பொது சீராய்வில் ரூ5,961/- லிருந்து 100% உயர்வு செய்து ரூ11,922/- என வரி விதித்ததை ஆட்சேபனை செய்து 20.1.2023ல் மாகராட்சி ஆணையருக்கு மனு அளித்தேன்.ஆனால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

1) மேற்படி சொத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை நாள் 01.04.2022–ன்படி சொத்து வரி, காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ளும்போது கட்டிடத்தின் பராமரிப்பு, வயது மற்றும் கட்டிடத்தின் தன்மை ஆகியவற்றிற்கான தள்ளுபடி மற்றும் அரசாணை எண்.53 நாள் 30.03.2022ல் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதலின்படி வரிவிதிப்பு செய்யப்படவில்லை,

2) மேலும் மதுரை மாநகராட்சி ஆணையாளர்அவர்கள் நாளிதழில் வெளியிட்ட சொத்துவரி திருத்த அறிவிக்கை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட சுற்றறிக்கையில் கண்டுள்ள கட்டிட கழிவோ அல்லது கட்டிட உச்சவரம்போ பின்பற்றப்படவில்லை.

நகராட்சி இயக்குநர் சுற்றறிக்கை ந.க. எண். 40032/2012/ஆர்1 நாள் 01.04.2022–ல் அரசு கடித எண்.38279/தேர்தல்/2006–2 நாள்01.02.2008–இல் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) எனவே நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை பாரா 10இல் கண்டுள்ளபடி 01.10.2021–ல் ரூ.5,961/- என வரிவிதித்திருக்கும் நிலையில் 01.04.2022 பொது சீராய்வில் 100% வரி உயர்வை ரத்து செய்து தகுந்த உத்திரவினை பிறப்பிக்குமாறு மாண்புமிகு

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

7. மதுரை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி வருவாய் அலுவலர் 06.11.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

மனுதாரர் மனுவில் தெரிவித்த மதுரை மாநகராட்சி, மண்டலம் 4 (தெற்கு) வார்டு 45, கதவு எண்.1F/2 சின்ன கண்மாய் தெரு, சேர்மன் முத்துராமைய்யர் தெரு, வரிவிதிப்பு எண். 115/045/901825 (115/071/02876)-க்கு 01.10.2021 முதல் சொத்து வரிவிதிப்பு செய்யப்பட்டது. 01.04.2022 முதல் தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி G.O (MS) No.53-ன்படியும், மதுரை மாநகராட்சி மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் அடிப்படையில் வணிக வரிவிதிப்பிற்கு ஏற்கனவே உள்ள வரித்தொகையில் 100% வரி உயர்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் மனுதாரருக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது என்று இம்முறைமன்றத்தில் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இத்தகவல் மனுதாரருக்கு 23.03.2023 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தின் முன் தெரிவிக்கிறேன்``.

8. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மதுரை மாநகராட்சி மண்டலம் 4ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலர் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மதுரை மாநகராட்சி மண்டலம் 4, வார்டு எண்.45, சின்ன கண்மாய் தெரு எண்.1F/2 வீட்டின் பழைய வரிவிதிப்பு எண்.115/071/02876 புதிய வரிவிதிப்பு எண்.115/045/901825க்குட்பட்ட வணிக கட்டிடம் வரிப்பிரிவினையின் பேரில் 01.10.2021 முதல் அரைவருட வரியாக ரூ. 5,961/- என விதிக்கப்பட்டு வரி நிலுவையில்லாமல் செலுத்தப்பட்டுள்ளது என்பதும், 01.04.2022 பொது சீராய்வில் ரூ5,961/-லிருந்து 100% உயர்வு செய்து ரூ11,922/- என வரி விதித்ததை ஆட்சேபனை செய்து 20.01.2023ல் மாநகராட்சி ஆணையருக்கு மனு அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், மேற்படி சொத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை நாள் 01.04.2022–ன்படி சொத்துவரி, காலிமனை வரி, பொது சீராய்வு மேற்கொள்ளும்போது கட்டிடத்தின் பராமரிப்பு, வயது மற்றும் கட்டிடத்தின் தன்மை ஆகியவற்றிற்கான தள்ளுபடி மற்றும் அரசாணை (நிலை)எண்.53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 30.03.2022–ல் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதலின்படி வரி விதிப்பு செய்யப்படவில்லை என்று தெரிவித்து 100% வரி உயர்வை ரத்து செய்யுமாறு மனுதாரர் கோரியுள்ளார்.

01.04.2022 முதல் பொது வரி சீராய்வு மேற்கொள்ள பொது மக்கள் அறியும் வகையில் 13.04.2022 தினத்தந்தி நாளிதழில் சொத்துவரி பொது வரி சீராய்வு குறித்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் கோரி விளம்பரம் செய்யப்பட்டது என்றும், அதனை தொடர்ந்து மாமன்ற தீர்மானம் நாள் 23.06.2022–ன் அடிப்படையிலும், மதுரை மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியீடு எண்.19 அடிப்படையிலும், அரசாணை (நிலை) எண் 53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 30.03.2022 அடிப்படையிலும் பொது சீராய்வு 01.04.2022 முதல் நடைமுறைபடுத்தப்பட்டு, அதன்படி மனுதாரரின் வரி விதிப்பு முற்றிலும் வணிக பயன்பாட்டு நிலையில் உள்ளதால் ஏற்கனவே வரிவிதிப்பிற்கு நிலவி வரும் தொகையான ரூ5,961/-லிருந்து 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட்டு 01.04.2022 முதல் தற்போது ரூ11,922/- என வரித் தொகை உயர்வு செய்யப்பட்டுள்ளது என்பதும் மதுரை மாநகராட்சி மண்டலம் 4ன் உதவி ஆணையரின்

அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில் பொதுவரி சீராய்வு குறித்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் பரிசீலிக்கப்பட்டும், மாமன்ற தீர்மானத்தின் அடிப்படையிலும், அரசாணையின்படியும், மனுதாரரின் வரி விதிப்பு வணிக பயன்பாட்டு நிலையில் உள்ளதால், 100% உயர்வு செய்யப்பட்டதாக மதுரை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி ஆணையர் தன்னுடைய அறிக்கையிலும், உதவி வருவாய் அலுவலர் தன்னுடைய வாக்குமூலத்திலும் தெரிவித்து இருந்தாலும், மனுதாரர் கோரியபடியும் மதுரை மாநகராட்சி, சொத்துவரி திருத்த அறிவிக்கை நாள் 12.04.2022–ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நகராட்சி நிர்வாக இயக்குநரின் 01.04.2022 நாளிட்ட சுற்றறிக்கை எண்.40032/2012/ஆர்1 மற்றும் அந்த சுற்றறிக்கையில் படிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண். 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 12.11.2007 மற்றும் அரசு கடித எண்.38279/தேர்தல்/2006-2 நாள் 01.02.2008–ன்படி அன்னாரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டதா என்பது குறித்து மதுரை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்படவில்லை. எனவே மேற்கண்ட நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கை மற்றும் அரசாணையின்படி சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து மீண்டும் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கவும், அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை 45 தினங்களுக்குள் இம்முறைமன்றத்திற்கு அனுப்பிவைக்குமாறு மதுரை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2024-ஆம் ஆண்டு நவம்பர் 18–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி S.G. ராஜலெட்சமி,
6 காமாட்சி அம்மன் கோவில் 1வது தெரு,
தெற்குமாசி வீதி,
மதுரை 625 001.

2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
அறிஞர் அண்ணா மாளிகை,
மதுரை 02.

3) உதவி ஆணையர்,
மண்டலம் 4,
மதுரை மாநகராட்சி,
CMR ரோடு,
மதுரை 09.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).